பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து வாடும் குழந்தைகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்து வாடும் குழந்தைகளுக்கு, அரசின் அனைத்து நலத் திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கப்படும்.

பெற்றோரை இழந்த குழந்தைகள், அவர்களது விருப்பத்தின் பேரில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேர்க்கப்படுவர்.

மேலும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாவண்ணம் அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கவும், கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஒரு விரிவான விசாரணை மேற்கொள்ள, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆணையம், இதுகுறித்து முழுமையாக விசாரித்து, தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும். அதனடிப்படையில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“நடைபெற்ற சம்பவத்துக்கு முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும்” என்று இங்கு பேசினார்கள்.

உள் துறையைக் கவனிப்பவன் என்ற முறையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் எந்தப் பிரச்சினையில் இருந்தும் நான் ஓடி ஒளிபவனல்ல. பொறுப்பை உணர்ந்ததால்தான் பொறுப்புடன் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். எடுத்த நடவடிக்கைகளையும் பட்டியலிட்டிருக்கிறேன். குற்றவாளிகளைக் கைது செய்துவிட்டுத்தான் உங்களுக்கு பதில் அளித்திருக்கிறேன். திறந்த மனதோடு இரும்புக் கரம் கொண்டு குற்றம் புரிந்தவர்களை அடக்கி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில், போதைப் பொருட்கள் விவகாரத்தில் அமைச்சர்கள், உயர் காவல் துறை அதிகாரிகள் ஈடுபட்டது விசாரிக்கப்பட்டு, அந்த வழக்கு நீதிமன்றத்திலும் இருக்கிறது என்பதை நாட்டு

2024 ஜூன் 21] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

மக்கள் மறந்துவிடவில்லை. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கள்ளச்சாராய மரணங்கள் பற்றிய பட்டியல் என் கையில் இருக்கிறது. அதையெல்லாம் வைத்து அரசியல் பேச நான் விரும்பவில்லை. துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

என்னைப் பொறுத்தவரை, சமூக விரோத சக்திகளிடமிருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றி, வணக்கம்.

6. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 29, 185 (2), 185 (3) மற்றும் 189 (3) ஆகியவற்றைத் தளர்த்துதல் (பேரவைக் கூட்ட நேரத்தில் மாற்றம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். உட்கார்ந்தே பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவை விதி 287–ன்கீழ், பேரவை விதி 29–ஐத் தளர்த்தி, பேரவைக் கூட்டம் “காலை 10–00 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2–00 மணிக்கு முடிவடையும்” என உள்ளதற்குப் பதிலாக, நாளை (22–6–2024) முதல், இக்கூட்டத் தொடர் முடியும் வரை, பேரவைக் கூட்டம் “காலை 9–30 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 1–30 மணிக்கு முடிவடையும்” எனவும் மற்றும்

பேரவை விதிகள் 185(2), 185(3) மற்றும் 189(3) ஆகியவற்றைத் தளர்த்தி, இவ்விதிகளில் ‘பிற்பகல் 2–00 மணிக்கு’ என உள்ளதை ‘பிற்பகல் 1–30 மணிக்கு’ எனவும் கொள்ளலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.